டிஜிட்டல் டெய்லி
Kaalaimani.com
காலைமணி.காம்
24.8.2023 வியாழக்கிழமை • மதுரை • பக்கங்கள் 24 • Online Edition • www.kaalaimani.com

# நிலவில் கால்பதித்தது சந்திரயான் 3 விண்கலம்

## விக்ரம் லேண்டர் தரையிறக்கம்

புது தில்லி, ஆக.23

நிலவை ஆய்வு செய்ய இஸ்ரோ அனுப்பிய சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர், வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டது.

இதன் மூலம் அமெரிக்கா, ரஷ்யாவைத் தொடர்ந்து நிலவில் கால்பதித்துள்ள இந்தியா, தனது விண்வெளி பயணத்தில் புதிய மைல் கல்லை எட்டியுள்ளது.

சந்திராயன் நிலவினை அடைந்ததைத் தொடர்ந்து இந்தியாவின் வெற்றியை தெரிவித்த இஸ்ரோ தலைவர் சோம்நாத், இந்தியா நிலவில் உள்ளது' என்று அறிவித்தார்.

நிலவினை ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால் சந்திரயான்-3 விண்கலம் கடந்த மாதம் 14ம் தேதி ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து எல்விஎம்-3 ராக்கெட் மூலம் மதியம் 2.35 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. அப்போது பேசிய இஸ்ரோ தலைவர் சோமநாத், 'திட்டமிட்டபடி விண்கலம் பூமியில் இருந்து 179 கிலோ மீட்டர் தொலைவில் அதன் சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது. சந்திரயான்-3 நிலவை நோக்கிய தனது பயணத்தைத் தொடங்கிவிட்டது. சந்திரயான்-3 விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டதன் மூலம் மீண்டும் அது மிகவும் வலுவான ஒரு விண்கலம் என்பதை உலகுக்கு நிரூபித்துள்ளது என்று தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஆக.1-ம் தேதி புவியீர்ப்பு விசையில் இருந்து விலக்கப்பட்டு நிலவை நோக்கி செல்லும் வகையில் சந்திராயன் 3ன் பயணப் பாதை மாற்றப்பட்டது.

தொடர்ந்து 5 நாள் பயணத்துக்கு பின் கடந்த 5ம் தேதி நிலவின் சுற்றுவட்டப்பாதைக்குள் சந்திரயான்-3 நுழைந்தது.

ஆக.17ம் தேதி பிற்பகல் 1.15 மணிக்கு சந்திரயான்-3 விண்கலத்தில் லேண்டர் பிரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நிலவுக்கு 153 மு 163 கி.மீ. தொலைவில் ரோவர் பயணித்து வந்தது. அதில் இருந்து லேண்டரின் உயரம் படிப்படியாக குறைக்கப்பட்டு வந்தது.



இந்த நிலையில் புதன்கிழமை இந்திய நேரப்படி மாலை சுமார் 6 மணி அளவில் சந்திராயன்-3ஐ நிலவில் தரையிரக்க திட்டமிடப்பட்டது. அதனைத்தொடர்ந்து புதன்கிழமை காலை முதல் லேண்டரைத் தரையிரக்குவதற்கான வேலையில் இஸ்ரோ விஞ்ஞானிகள் ஈடுபட்டுவந்தனர். இதனைத் தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு லேண்டரை தரையிரக்கும் பணியினை விஞ்ஞானிகள் தொடங்கினர்.

லேண்டரின் உயரம் படிப்படியாக குறைக்கப்பட்டு லேண்டர் நிலவினை நோக்கி பயணித்தது. இதனைத் தொடர்ந்து நிலவின் தென்துருவத்தில் விக்ரம் லேண்டர் மாலை 6.02 மணிக்கு வெற்றிகரமாக தரையிரக்கப்பட்டது. அப்போது, இஸ்ரோ விஞ்ஞானிகள் உள்ளிட்டோர் கைகளைத் திட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த சாதனை குறித்த அறிவிப்பை, இஸ்ரோ தலைவர் சோம்நாத் அறிவித்தார். இந்தியா தற்போது நிலவின் மீது இருப்பதாக அவர் பெருமிதம் பொங்க குறிப்பிட்டார். அமெரிக்கா, ரஷ்யாவைத் தொடர்ந்து இந்தியா நிலவில் கால் பதித்துள்ளது.

kaalaimani.com in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Phone: 4366425.

# விரைவில் 5 ட்ரில்லியன் பொருளாதார மதிப்பு கொண்ட நாடாகும் இந்தியா: மோடி தகவல்

ஜோஹன்ஸ்பர்க், ஆக.23

விரைவில் 5 ட்ரில்லியன் டாலர் (சுமார் ரூ.415 லட்சம் கோடி) பொருளாதார மதிப்பு கொண்ட நாடாக இந்தியா மாறும் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

தென்னப்பிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்க் நகரில் பிரிக்ஸ் தொழிலதிபர்கள் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளதாவது:



சர்வதேச பொருளாதாரத்தில் குழப்பமான நிலை ஏற்பட்டுள்ள போதிலும், உலகில் மிக வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதார நாடாக தற்போது இந்தியா உள்ளது. பேரிடர் களையும் இன்னல்களையும் பொருளாதார மீட்சிக்கான வாய்ப்பு களாக இந்தியா மாற்றியுள்ளது. கடந்த சில ஆண்டுகளில் குறிக்கோளுடன் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள், இந்தியாவில் எளிதாக வணிகம் மேற்கொள்வதில் தொடர்ந்து முன்னேற்றம் ஏற்பட வழிவகுத்துள்ளது. இந்தியாவில் சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி), திவால் சட்டம் அமல்படுத்தப்பட்டது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரித்துள்ளது.

நாட்டின் வளர்ச்சிப் பாதையில் பல்வேறு வணிகங்கள் கைகோக்க வேண்டும். பாதுகாப்பு, விண்வெளி போன்ற துறை களில் தனியார் முதலீடுகளுக்கான கதவுகளை இந்தியா திறந் துள்ளது. மேலும், சூரிய மின்சக்தி, காற்றாலை, மின்சார வாக னங்கள், பசுமை ஹைட்ரஜன் உள்ளிட்டவற்றில் இந்தியாவை சர்வதேச உற்பத்தி மையமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் 5 ட்ரில்லியன் டாலர் பொருளாதார மதிப்பு கொண்ட நாடாக இந்தியா மாறும். வருங்காலத்தில் உலகின் வளர்ச்சி என்ஜினாக இந்தியா இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்றார் அவர்.

காலைமணி.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# இந்தியா 2025 ஆம் ஆண்டில் 150 பில்லியன் டாலர் உயிரி பொருளாதாரத்தை எட்டும்: ஜிதேந்திர சிங்

புது தில்லி, ஆக.23

இந்தியா 2025ம் ஆண்டுக்குள் 150 பில்லியன் டாலர் உயிரி பொருளாதாரத்தை எட்டும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.




மத்திய உயிரி தொழில்நுட்பத்துறை (பயோடெக்னாலஜி) மற்றும் அமெரிக்க தேசிய அறிவியல் அறக்கட்டளை ஆகிய வற்றுக்கு இடையிலான கூட்டுச் செயல்பாட்டு ஒப்பந்தம் கையெ முத்தாகும் நிகழ்ச்சி புது தில்லியில் கையெ முத்தானது. இந் நிகழ்ச்சியின் போது பேசிய அமைச்சர், இந்தியாவில் வளர்ந்து வரும் உயிரி பொருளாதாரம் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார மேம்பாட்டிற்கு கணிசமாக பங்களிக்கும் என்றார். உலகளாவிய உயிரி தொழில்நுட்பத் துறையில் இந்தியா 3 முதல் 5 சதவீத சந்தைப் பங்கைக் கொண்டுள்ளது என்றும் இத்துறையில் இந்தியா உலக அளவில் 12 வது இடத்திலும், ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் 3 வது இடத்திலும் உள்ளது என்று அவர் கூறினார்.

உலகளவில் இந்தியா 3-வது பெரிய புத்தொழில் அமைப்பைக் கொண்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். உலகளாவிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் குறியீட்டில் இந்தியாவின் தரவரிசை தொடர்ந்து உயர்ந்து வருகிறது என்றும் அவர் கூறினார். பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையான தற்சார்பு இந்தியா என்ற கொள்கைக்கு ஏற்ப எதிர்காலத்திற்கு ஏற்ற தொழில்நுட்ப தளத்தை உருவாக்கும் நோக்கில் புதுமைக் கண்டுபிடிப்புகளுக்கு அரசு தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறது என்று ஜிதேந்திர சிங் கூறினார்.

உயிரி தொழில்நுட்ப புதுமைக் கண்டுபிடிப்பு மற்றும் உயிரி உற்பத்தித் துறையில் இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கு இடையிலான ஒத்துழைப்பை இந்த கூட்டு செயல்பாட்டு ஒப்பந்தம் அதிகரிக்கும் என்று அமைச்சர் கூறினார். இது உயிரி தொழில்நுட்பம் தொடர்பான தொழில்களை வலுப்படுத்தவும், இரு நாடுகளின் உயிர் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் பங்களிக்கும் என்று ஜிதேந்திர்ர சிங் கூறினார்.

# புழுங்கல் அரிசி ஏற்றுமதிக்குத் தடை விதிக்க திட்டம் ஏதும் இல்லை: மத்திய அரசு தகவல்

புது தில்லி, ஆக.23

பாசுமதி அல்லாத மற்ற வகை புழுங்கல் அரிசியின் ஏற்றுமதிக்குத் தடை விதிப்பதற்கு மத்திய அரசு திட்டமிடவில்லை என உணவுத் துறைச் செயலர் சஞ்சீவ் சோப்ரா தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. உள்நாட்டில் அரிசி விலை அதிகரித்ததை யடுத்து, பாசுமதி அல்லாத பச்சையரிசி ரகங்களின் ஏற்றுமதிக்கு மத்திய அரசு கடந்த மாதம் 20ம் தேதி தடை விதித்தது. குருணை அரிசியின் ஏற்றுமதிக்குக் கடந்த ஆண்டு செப்டம்பரில் மத்திய அரசு தடை விதித்தது. கோதுமை ஏற்றுமதிக்குக் கடந்த ஆண்டு மே மாதம் தடை விதிக்கப்பட்டது.



நாட்டின் இந் நடவடிக்கைக்குப் பல நாடுகள் அதிருப்தி தெரி வித்தன. எனினும், அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படும் பாசுமதி அரிசி, மற்ற ரக புழுங்கல் அரிசி ஆகியவற்றுக்கு எந்தவிதத் தடையும் விதிக்கப்படவில்லை என மத்திய அரசு விளக்க மளித்திருந்தது. மேலும், உள்நாட்டு விலையைக் கட்டுப்படுத்த வெங்காய ஏற்றுமதிக்கு சமீபத்தில் 40 சத வரியை மத்திய அரசு விதித்தது. அதையடுத்து, புழுங்கல் அரிசியின் ஏற்றுமதிக்கும் மத்திய அரசு கட்டுப்பாடுகளை விதிக்கலாம் எனத் தகவல் வெளியானது.

இது குறித்து மத்திய உணவுத் துறைச் செயலர் சஞ்சீவ் சோப்ரா தெரிவித்துள்ளதாவது: பாசுமதி அல்லாத மற்ற வகை புழுங்கல் அரிசியின் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்துவது தொடர்பான பரிந்துரை எதுவும் மத்திய அரசின் பரிசீலனையில் இல்லை. ரஷியாவிடமிருந்து கோதுமையை இறக்குமதி செய்யும் திட்டமும் மத்திய அரசிடம் தற்போது இல்லை என்றார். கடந்த 2022-23ம் நிதியாண்டில் 45.6 லட்சம் டன் பாசுமதி அரிசியை சுமார் 480 கோடி அமெரிக்க டாலர் மதிப்புக்கு இந்தியா ஏற்றுமதி செய்திருந்தது. 177.9 லட்சம் டன் பாசுமதி அல்லாத அரிசி ரகங்களை சுமார் 636 கோடி டாலருக்கு ஏற்றுமதி செய்திருந்தது. கடந்த 2022-23 பயிர்ப் பருவத்தில் (ஜூலை-ஜூன்) மொத்த உள்நாட்டு அரிசி உற்பத்தி 13.55 கோடி டன்னாக இருந்தது. இது அதற்கு முந்தைய பயிர்ப் பருவத்தில் 12.95 கோடி டன்னாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஆன்லைன் வாயிலாக கடன் மெர்கன்டைல் வங்கி அறிமுகம்

சென்னை, ஆக.23

சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு, எளிமையாக கடன் வழங்கும் நோக்கில் 'டிஜிட்டல்' தளத்தை தமிழ்நாடுமெர்கன்டைல் வங்கி அறிமுகம் செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இதுகுறித்து, மெர்க்கண்டைல் வங்கி வங்கி வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்கும் பணியை எளிமைப்படுத்தும் வகையில், தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி, ஜோகாட்டா தொழில்நுட்ப நிறுவனத்துடன் கைகோர்த்துள்ளது. இதன் வாயிலாக, சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு, ஆன்லைன் வாயிலாக விரைவாகவும், எளி மையாகவும் கடன் வழங்க முடியும். மேலும், வங்கி செயல்பாடு களில், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பங்களிப்பு 36 சதமாக உள்ளது. அவர்களுக்கான வங்கி சேவையை டிஜிட்டல் மயமாக்குவதில், வங்கி உறுதியாக உள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நடப்பாண்டின் முதல் காலாண்டில் காகிதம் இறக்குமதி 39 சதம் உயர்வு

புது தில்லி, ஆக.23

இந்தியாவில் காகிதம் மற்றும் காகித அட்டை இறக்குமதி, நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் 39 சதம் அதிகரித்து, 4.09 லட்சம் டன்களாக இருந்ததாக, ஐபிஎம்ஏ எனப்படும் இந்திய காகித உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து ஐ.பி.எம்.ஏ., மேலும் தெரிவித்துள்ளதாவது:

நடப்பு நிதியாண்டில், முதல் காலாண்டான ஏப்ரல் – ஜூன் காலகட்டத்தில் காகிதம் மற்றும் காகித அட்டை இறக்குமதி 39 சதம் அதிகரித்து, 4.09 லட்சம் டன்களாக இருந்தது. இதன் மதிப்பு ரூ.3,153 கோடி ரூபாயாகும்.

முந்தைய ஆண்டு இதே காலகட்டத்தில் இறக்குமதி 2.94 லட்சம் டன்களாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில், தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இருந்து இறக்குமதி கிட்டத்தட்ட மூன்று மடங்கும், சீனாவில் இருந்து 37 சதமும் உயர்ந்திருந்தது. இவ்வாறு அது தெரிவித்துள்ளது. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இருந்து, இறக்குமதி வரி இல்லாமலும்; கிழக்காசிய நாடுகளான ஜப்பான், தென்கொரியாவிடமிருந்து தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் அடிப்படையிலும்; சீனாவிடமிருந்து, ஆசிய – பசிபிக் வர்த்தக ஒப்பந்தத்தின் கீழும், காகிதம் மற்றும் காகித அட்டைகள் இறக்குமதி செய்யப்படுவதாக, இந்திய காகித உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் பவன் அகர்வால் தெரிவித்தார்.



# இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கி நிலையான வளர்ச்சியுடன் லாபப் பயணத்தைத் தொடர்கிறது

புது தில்லி, ஆக.23

வங்கிச் சேவைத் துறையில் ஒரு மாற்றகரமான மைல்கல்லை எட்டியுள்ள இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கி (ஐபிபிபி) அதன் லாபப் பாதையில் தொடர்வதாக பெருமையுடன் அறிவிக்கிறது, நிலையான நிதி உள்ளடக்கம் மற்றும் குடிமக்களுக்கு அதிகாரமளித்தலுக்கான அதன் உறுதியான அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. கடந்த நிதியாண்டின் முதல் லாபப் பயணத்தைக் கொண்டாடிய அந்த வங்கி, இந்த நிதியாண்டின் முதல் காலாண்டு முடிவில் வெற்றிகரமான லாப ஓட்டத்தைத் தொடர்கிறது, நாட்டின் தொலைதூர மூலைகளில் கூட யாரும் பின்தங்கிவிடக்கூடாது என்பதை உறுதிசெய்து, டிஜிட்டல் இந்தியா முன்முயற்சியை இயக்க முழு மனதுடன் உறுதிபூண்டுள்ளது.

இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கி வப்பட்டதிலிருந்து, நாடு முழுவதும் கோடிக்கணக்கான குடும்பங்களுக்கு வீட்டு வாசலில் வங்கி சேவைகளை விரிவுபடுத்தும் கனவால் உந்தப்பட்டுள்ளது. 2017ம் ஆண்டில் ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சி மற்றும் சத்தீஸ்கரின் ராய்ப்பூரில் தொடங்கப்பட்ட இந்தப் பயணம், மிகக் குறுகிய காலத்தில் முன்னெப்போதும் இல்லாத வெற்றியைக் கண்டது.

2022-23 நிதியாண்டில் ரூ.20.16 கோடி செயல்பாட்டு லாபத்தை ஈட்டிய அசாதாரண சாதனையைப் பகிர்ந்து கொள்வதில் ஐபிபிபி மகிழ்ச்சியடைகிறது. ஒட்டுமொத்த வருவாயில் 66.12 சதவீத வளர்ச்சி காணப்பட்டது, இது ஒட்டுமொத்த செயல்பாட்டு செலவுகளில் 17.36 சதவீத அதிகரிப்பை தாண்டியது, இந்த சாதனையின் முக்கிய காரணிகளாக இருந்தன. இது ஐபிபிபியின் வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட மற்றும் செலவு குறைந்த வங்கி மாதிரியின் சக்தியை நிரூபிக்கிறது.

‘ஐபிபிபியின் வெற்றிக் கதை எங்கள் அர்ப்பணிப்புள்ள குழு, பங்குதாரர்கள் மற்றும் மிக முக்கியமாக, ஏழு கோடிக்கும்



அதிகமான மதிப்புமிக்க வாடிக் கையாளர்களைக் கொண்ட எங்கள் குடும்பத்தின் நம்பிக்கை ஆகியவற்றின் கூட்டு முயற்சி களுக்கு ஒரு சான்றாகும்' என்று இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கி யின் நிர்வாக இயக்குநரும் தலைமை நிர்வாக அதிகாரியு மான ஜே வெங்கட்ராமு மேற்கோள் காட்டினார். 'ஜன்தன், ஆதார், இந்தியா ஸ்டாக் போன்ற பல கொள்கை முன்முயற்சிகள் மற்றும் நிதி சேர்க்கை துறையில் வேறுபட்ட வங்கி வகை, இ-கேஒய்சி போன்ற ஒழுங்குமுறை உந்துதல்களுக்கு நன்றி, இது ஐபிபிபியின் வெற்றிக் கதையை முன்னெடுத்துச் செல்வதில் பெரும் பங்களித்தது. வங்கியின் விவேகமான நிதி மேலாண்மை, ஒழுங்குமுறை ஆதரவுடன், வாடிக்கையாளர் தளம் மற்றும் தயாரிப்பு வழங்கல்களில் அதிவேக வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது, 'என்று அவர் மேலும் கூறினார்.

1,55,000 தபால் நிலையங்கள் மற்றும் 3,00,000 அஞ்சல் ஊழியர்களைக் கொண்ட உலகின் மிகப்பெரிய அஞ்சல் வலையமைப்பை மேம்படுத்துவதன் மூலம் இன்று ஐபிபிபி இந்தியாவில் உள்ள சாமானிய மக்களுக்கு மிகவும் அணுகக்கூடிய, மலிவு மற்றும் நம்பகமான வங்கியாக மாறி யுள்ளது. இவ்வாறாக, பாரம்பரிய வங்கிகள் வழக்கமான தடைகள் காரணமாகப் பிடிக்கத் தவறிய இடங்களில் செயல்படுவதற்காக, தேசிய அளவில் ஒரு பி.ஐ.ஜி.டி.ஏ வங்கிச் சேவைத் தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

**இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கி பற்றி:** மத்திய அரசுக்கு சொந்தமான 100 சத பங்குகளுடன் செப்டம்பர் 1, 2018 அன்று பிரதமர் நரேந்திர மோடியால் ஐபிபிபி தொடங்கப்பட்டது. இந்தியா வில் சாமானிய மக்களுக்கு மிகவும் அணுகக்கூடிய, மலிவு மற்றும் நம்பகமான வங்கியை உருவாக்கும் தொலைநோக்குப் பார்வை யுடன் இந்த வங்கி அமைக்கப்பட்டுள்ளது. இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கியின் அடிப்படை பணி, வங்கிச் சேவை இல்லாத மற்றும் குறைந்த வங்கிச் சேவைக்கான தடைகளை நீக்கி, அஞ்சல் வலையமைப்பைப் பயன்படுத்தி கடைசி மைல்களை அடைவதாகும்.

# ஜூலையில் கச்சா எண்ணெய் இறக்குமதி சரிவு

புது தில்லி, ஆக.23

ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வது கடந்த ஜூலை மாதத்தில் குறைந்துள்ளதாக வர்த்தகத்துறை தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. கடந்த ஒன்பது மாதங்களில் முதல்முறையாக இறக்குமதி குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




இது குறித்து விரிவான செய்தியாவது: உலகின் மிகப் பெரிய எண்ணெய் இறக்கமதி நாடுகளான சீனாவும், இந்தியாவும் கடந்த ஜூலையில், ரஷ்யா மற்றும் மேற்காசிய நாடான சவுதி அரேபியாவிடம் இருந்து இறக்குமதி செய்யும் கச்சா எண்ணெய் அளவைக் குறைத்துள்ளன. விலை அதிகரிப்புக்குப் பின், இரு எண்ணெய் உற்பத்தி நாடுகளும் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை குறைத்துள்ளன. இந்தியா, சவுதியிடம் இருந்து இறக்குமதி செய்யும் கச்சா எண்ணெயின் அளவை, கடந்த இரண்டரை ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு குறைத்துள்ளது. ரஷ்யாவிடம் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய், கடந்த ஒன்பது மாதங்களில் முதல் முறையாக குறைந்துள்ளதாக வர்த்தகம் மற்றும் தொழில்துறை தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் ஒட்டுமொத்த இறக்குமதியும் ஜூன் மாதத்தில் இருந்து, 5.2 சதம் சரிந்து ஜூலையில், 4.4 மில்லியன் பீப்பாய்களாக குறைந்துள்ளன. மழை காலங்களில் பல சுத்திகரிப்பு ஆலைகள் பராமரிப்பிற்காக மூடப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ரஷ்யா எண்ணெய் இறக்குமதி, 5.7 சதம் குறைந்து, 18.5 லட்சம் பீப்பாய்களாகவும், சவுதியில் இருந்து இறக்குமதி செய்வது, 26 சதம் சரிந்து, 4.70 லட்சம் பீப்பாய்களாகவும் இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா தன் மொத்த எண்ணெய் தேவையில் 80 சதத்திற்கும் மேல் இறக்குமதி செய்கிறது. கடந்த ஜூலையில் இந்தியாவிற்கு சப்ளை செய்யும் நாடுகளில் ரஷ்யா முதல் இடத்தில் இருந்தது. இதைத் தொடர்ந்து ஈராக், சவுதி உள்ளன. நடப்பு நிதியாண்டின் முதல் நான்கு மாதங்களில், ஒபெக் எனப்படும் பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பிடம் இருந்து, இந்தியாவின் எண்ணெய் இறக்குமதி சதம், கடந்த 22 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிக குறைவாக இருந்தது.

# நாட்டின் உணவு பொருட்களின் விலை உயர்வு தற்காலிகமானது: மத்திய அரசு விளக்கம்

புது தில்லி, ஆக.23

கடந்த ஜூலை மாதத்தில், சில்லரை விலை பணவீக்கம், 7.44 சதமாக இருந்தது. கடந்த 15 மாதங்களில் இதுதான் மிகவும் அதிகம். குறிப்பிட்ட உணவு பொருட்களின் விலை உயர்வுதான், பணவீக்கம் அதிகரிக்க காரணம் ஆகும்.




இந்நிலையில், மத்திய நிதி அமைச்சகம், ஜூலை மாதத்துக்கான மாதாந்திர பொருளாதார ஆய்வறிக்கையை வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது: தானியங்கள், பருப்பு வகைகள், காய்கறிகள் ஆகியவற்றின் விலை, கடந்த ஜூலை மாதத்தில் இரட்டை இலக்க உயர்வை சந்தித்துள்ளது. உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட பாதிப்பு, பணவீக்கத்தை அதிகரித்தது. கர்நாடக மாநிலம் கோலாரில் தக்காளியில் ஏற்பட்ட வெள்ளை பூச்சி தாக்குதலால், தக்காளியின் உள்நாட்டு வரத்து பாதிக்கப்பட்டது.

வடமாநிலங்களில் பருவமழை முன்கூட்டியே தொடங்கியது. இந்த காரணங்களால் தக்காளி விலை கணிசமாக உயர்ந்தது. காரிப் பருவத்தில் உற்பத்தி குறைந்ததால், துவரம் பருப்பின் விலையும் கடுமையாக உயர்ந்தது. தக்காளி, பச்சை மிளகாய், இஞ்சி, பூண்டு ஆகியவற்றின் விலை 50 சதவீதம் உயர்ந்தது. இதுவே பணவீக்க உயர்வுக்கு காரணம். அதே சமயத்தில், விலை உயர்வை கட்டுப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. புதிய தக்காளி வரத்து, இம்மாத இறுதியிலோ அல்லது அடுத்த மாத தொடக்கத்திலோ வரத்தொடங்கும். அதன்பிறகு தக்காளி விலை குறையும். எனவே, உணவு பொருட்களின் விலை உயர்வு தற்காலிகமானதுதான். இருப்பினும், உலக அளவில் நிச்சயமற்ற நிலை காணப்படுவதாலும், உள்நாட்டு வரத்து பாதிக்கப்பட்டு இருப்பதாலும் வருகிற மாதங்களில் பணவீக்கம் அதிகரிக்கலாம். எனவே, மத்திய அரசும், ரிசர்வ் வங்கியும் கூடுதல் விழிப்புடன் இருக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சரக்கு சேவை வரியால் அரசுக்கு வருவாய் இழப்பு பிரதமரின் பொருளாதார ஆலோசகர் கருத்து

கொல்கத்தா, ஆக.23

சரக்கு-சேவை வரி (ஜிஎஸ்டி) விதிப்பால் மத்திய அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு தலைவர் விவேக் தேவ்ராய் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. கொல்கத்தா வர்த்தக சம்மேளனம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: ஜிஎஸ்டி வரி விதிப்பு என்பதே ஒரே விகித வரி விதிப்பை அடிப் படையாகக் கொண்டதுதான். முதலில் ஜிஎஸ்டி அறிமுகப் படுத்தப்பட்டபோது சராசரி ஜிஎஸ்டி விகிதம் 17 சதமாக இருக்கும் என்று நிதியமைச்சகம் மதிப்பிட்டது. ஆனால், இப்போது சராசரி ஜிஎஸ்டி 11.4 சதமாக உள்ளது. எனவே, ஜிஎஸ்டி அறிமுகத்தால் அரசுக்கு வருவாய் இழப்பு தான் ஏற்பட்டுள்ளது. 3 சதத்துக்கு மேல் வரி விகிதம் இருப்பதை யாரும் விரும்பவில்லை. இதனால்தான் எளிமைப்படுத்தப்பட்ட ஜிஎஸ்டி வரி விதிப்பு நமக்கு கிடைக்கவில்லை. ஜிஎஸ்டி வரி விதிப்பு முறை மீது பல்வேறு குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன என்றார்.



# இரண்டு லட்சம் மெட்ரிக் டன் சர்க்கரையை மத்திய அரசு கூடுதலாக ஒதுக்கீடு செய்துள்ளது

புது தில்லி, ஆக.23

ஓணம், ரக்ஷா பந்தன் மற்றும் கிருஷ்ண ஜெயந்தி ஆகிய பண்டிகைகளையொட்டி சர்க்கரைக்கான தேவை அதிகரிக்கும் என்பதால் அதைக் கருத்தில் கொண்டு, 2023-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்கு 2 லட்சம் மெட்ரிக் டன் சர்க்கரையை மத்திய அரசு கூடுதலாக ஒதுக்கீடு செய்துள்ளது. ஏற்கனவே ஆகஸ்ட் மாதத்திற்கு 23.5 லட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த கூடுதல் ஒதுக்கீடு உள்நாட்டு சந்தையில் சர்க்கரையின் நியாயமான விலையை உறுதி செய்யும்.

கடந்த ஓராண்டில் சர்வதேச சர்க்கரை விலை 25 சதவீதம் அதிகரித்த போதிலும், உள்நாட்டில் சர்க்கரையின் சராசரி சில்லறை விலை ஒரு கிலோவுக்கு சுமார் ரூ. 43.30 ஆக உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் நாட்டில் சர்க்கரை விலை வருடாந்திர பணவீக்கம் 2 சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளது.

நடப்பு சர்க்கரை பருவத்தில் நாட்டில் 330 லட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. உள்நாட்டு நுகர்வு சுமார் 275 லட்சம் மெட்ரிக் டன்னாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய நிலையில், உள்நாட்டுத் தேவையை பூர்த்தி செய்ய போதுமான சர்க்கரை கையிருப்பு நாட்டில் உள்ளது. சர்க்கரை விலை ஒவ்வொரு ஆண்டும் ஜூலை-செப்டம்பர் மாதங்களில் உயர்ந்து, பின்னர் கரும்பு அரவை துவங்கும் போது குறையும். அதன் அடிப்படையில் சிறிய அளவில் விலை உயர்ந்து குறுகிய காலத்திற்கு நீடிக்கிறது.



# இந்தியன் வங்கியில் ஆன்லைன் முறையில் லாக்கர் ஒப்பந்த செயலாக்கம்

சென்னை, ஆக.23

தேசிய மின்–வர்த்தக சேவைகள் லிமிடெட் – ன் டிஜிட்டல் ஆவண செயலாக்க தளத்தின் வழியாக, ஆன்லைன் முறையிலேயே லாக்கர் வசதிக்கான ஒப்பந்தத்தை செயல்படுத்தும் சேவையை முதன் முறையாக அறிமுகம் செய்யும் பொதுத்துறை வங்கி என்ற பெருமையினை இந்தியன் வங்கி பெற்றிருக்கிறது. ஆன்லைன் முறையில் மேற்கொள்ளப்படும் லாக்கர் சேவைக்கான ஒப்பந்தம், அனைத்து நாட்களிலும், 24 மணி நேரமும் கிடைக்கப் பெறும். வழக்கமாக வங்கிக் கிளைக்கு சென்று நேரடியாக இந்த ஒப்பந் தத்தை வாடிக்கையாளர்கள் மேற்கொள்வதற்கு எடுக்கக்கூடிய நேரத்தை டிஜிட்டல் முறையிலான ஒப்பந்த செயல்முறை பெரிதும் குறைக்கும்; மேலும் வாடிக்கையாளர் சேவை பெறும் வசதியினை இன்னும் சிறப்பாக மேம்படுத்தும்.

டிஜிட்டல் ஆவண செயலாக்கம் என்பது, முற்றிலும் தானியக்க முறையில் செயல்படும் ஒப்பந்த செயலாக்க தளமாகும். தாள் பயன்பாடு அல்லாத இ–ஸ்டாம்ப் மற்றும் மின்னணுவியல் கையொப்பம் ஆகிய வசதிகள் இதில் உள்ளன. மின்னணுவியல் கையொப்ப வசதியில், ஆதார் அடிப்படையிலான ஒரு நேர கடவுச்சொல் / உயிரிய அளவியல் மற்றும் டாங்கில் அடிப் படையிலான டிஜிட்டல் கையொப்பம் ஆகியவை உள்ளடங்கும். ஒப்பந்த ஆவணத்தை வரிசை முறையில் செயலாக்கம் செய்வதற்கான வசதியை கையொப்பமிடும் தனிநபர் மற்றும் ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களுக்கு இச்செயல்தளம் வழங்குகிறது. தங்கள் வசதிக்கேற்ப லாக்கருக்கான ஒப்பந்தத்தை செயலாக்கம் செய்வதற்கு கூட்டுக் கணக்கு வைத்திருக்கும் நபர்களுக்கு இது வசதியானதாக இருக்கும். வாடிக்கையாளர்கள் தாங்கள் செயலாக்கம் செய்த பரிவர்த்தனையின் நிலையை பார்வையிட்டு அறிந்து கொள்ளலாம் மற்றும் நிகழ் நேரத்திலேயே இதற்கான மின்னணுவியல் சான்றிதழை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தொடக்கத்திலிருந்து இறுதி வரை முற்றிலும் டிஜிட்டல் முறை யிலான இச்செயல்முறை, முத்திரைத் தாள்களை வாங்குவதற்கும், அவற்றில் கையொப்பமிடுவதற்குமான தேவையையும் அவசிய மற்றதாக ஆக்கிவிடுகிறது. இதனால் இந்த ஒப்பந்த செயல்முறை விரைவானதாகவும், அதிக திறன் உள்ளதாகவும் ஆக்கப்படுவது டிஜிட்டல் முறையிலான லாக்கர் ஒப்பந்தத்தின் தனிச்சிறப்பான அம்சமாகும். இச்சிறப்பான வசதியை இந்தியன் வங்கியின் வாடிக்கையாளர்கள் பயன்படுத்தி பலனடையலாம்.

# 2023-24 ஆம் ஆண்டு கரீஃப் சந்தைப் பருவத்தில் 521.27 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்ய திட்டம்

புது தில்லி, ஆக.23

2023-24 ஆம் ஆண்டு கரீஃப் பருவத்திற்கான கொள்முதல் ஏற்பாடுகள் குறித்து விவாதிக்க மத்திய அரசின் உணவு மற்றும் பொது விநியோகத் துறையின் செயலாளர் 21.08.2023 அன்று மாநில உணவு செயலாளர்கள் மற்றும் இந்திய உணவுக் கழகத்தின் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

எதிர்வரும் கரீஃப் சந்தைப் பருவம் 2023-24 (கரீஃப் பயிர்) காலத்தில் 521.27 லட்சம் மெட்ரிக் டன் அரிசி கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது, இது கடந்த ஆண்டு மதிப்பீடுகளான 518 லட்சம் மெட்ரிக் டன்னுடன் ஒப்பிடும்போது, முந்தைய கரீஃப் சந்தைப் பருவம் 2022-23 (கரீஃப் பயிர்) காலத்தில் 496 லட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டது. சத்தீஸ்கர் (61 எல்எம்டி) மற்றும் தெலங்கானா (50 எல்எம்டி), ஒடிசா (44.28 எல்எம்டி), உத்தரப் பிரதேசம் (44 எல்எம்டி), ஹரியானா (40 எல்எம்டி), மத்தியப் பிரதேசம் (34 எல்எம்டி), பீகார் (30 எல்எம்டி), ஆந்திரப் பிரதேசம் (25 எல்எம்டி), மேற்கு வங்கம் (24 எல்எம்டி) மற்றும் தமிழ்நாடு (15 எல்எம்டி) ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

2023-24 ஆம் ஆண்டில் 33.09 லட்சம் மெட்ரிக் டன் சிறுதானியங்கள் மாநிலங்களால் கொள்முதல் செய்யப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2022-23 ஆம் ஆண்டில் 7.37 லட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 2023-24ஆம் நிதியாண்டில் தொடங்கி மூன்று ஆண்டுகள் வரை 6 சிறுதானியங்களை கேழ்வரகின் குறைந்தபட்ச ஆதார விலையில் மாநிலங்கள் கொள்முதல் செய்யும் வசதியும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. சிறுதானியங்களின் கொள்முதல் மற்றும் நுகர்வை அதிகரிப்பதற்காக, மத்திய அரசு சிறுதானியங்களின் விநியோக காலத்தை மாற்றியமைத்துள்ளது, சிறுதானியங்களை மாநிலங் களுக்கு இடையே கொண்டு செல்வதை ஒருங்கிணைத்துள்ளது, மேம்பட்ட மானியம், நிர்வாக கட்டணம் 2% மற்றும் ஆறு சிறுதானியங்களை கொள்முதல் செய்வதற்கான வழிகாட்டுதல்களை திருத்தியுள்ளது. சர்வதேச சிறுதானிய ஆண்டு – 2023 காரணமாக மட்டுமல்லாமல், பயிர்களை பன்முகப்படுத்துவதற்கும் உணவு முறைகளில் மேம்பட்ட ஊட்டச்சத்துக்கும் சிறுதானியங்களை கொள்முதல் செய்வதில் கவனம் செலுத்துமாறு மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

# இந்தியா ஆசியான் வர்த்தக ஒப்பந்தத்தை மறுஆய்வு செய்ய மத்திய அரசு முடிவு

புது தில்லி, ஆக.23

இந்தியாவிற்கும், ஆசியான்' கூட்டமைப்பு நாடுகளுக்கும் இடையே, தற்போதுள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை மறுஆய்வு செய்யவும், இது தொடர்பான பேச்சை வரும் 2025ம் ஆண்டிற்குள் முடிக்கவும் ஒப்புக்கொண்டதாக வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.




இது குறித்து விரிவான செய்தியாவது:

இந்தியா, ஆசியான் எனப்படும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்புடன், தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில், கடந்த 2009 ஆகஸ்ட் 13ல் கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தம், 2010 ஜனவரி 1ம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.

இந்நிலையில், 20வது இந்தியா– ஆசியான் பொருளாதார அமைச்சர்களின் ஆலோசனைக் கூட்டம், இந்தோனேசியாவின் செமராங்கில் சமீபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தற்போதைய தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை மறுஆய்வு செய்வது குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும், இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு முன்பாக, ஆசியான் – –இந்தியா சரக்கு வர்த்தக ஒப்பந்ததின் கூட்டுக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில், ஆசியான்– – இந்தியா வர்த்தக ஒப்பந்தத்தின் மறு ஆய்வு குறித்த ஆலோசனை, பேச்சு உள்ளிட்டவைகள் குறித்து இறுதி செய்யப்பட்டன.

ஆசியான்– இந்தியா சரக்கு வர்த்தக ஒப்பந்தத்தின் மறுஆய்வு என்பது, இந்திய வர்த்தக நிறுவனங்களின் நீண்ட கால கோரிக்கையாகும்.

இந்த மறு ஆய்வு, தடையற்ற வர்த்தகத்தை எளிதாக்கி, பரஸ்பரம் நாடுகளிடையே வணிக பயன்பாட்டிற்கும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், இருதரப்பு வர்த்தகத்தில், தற்போதைய சமச்சீரற்ற தன்மையை சரி செய்வதுடன், வர்த்தகத்தை மேம்படுத்தவும் உதவும்.

# 2024 கே.டி.எம். 125 டியூக் சந்தையில் அறிமுகம்

சென்னை, ஆக.23

கேடிஎம் 125 டியூக் மோட்டார்சைக்கிள் மிகப்பெரிய அப்டேட் பெற்றுள்ளது. அதன்படி 2024 கே.டி.எம். 125 டியூக் மாடல் அறிமுகம் செய்யப்பட்டது. புதிய 2024 கே.டி.எம். 125 டியூக் மாடல் முழுமையாக மாற்றப்பட்டு இருக்கிறது. இதன் இந்திய வெளியீடு குறித்து இதுவரை எந்த தகவலும் இல்லை. எனினும், சர்வதேச மாடல் தோற்றத்தில் 2024 டியூக் 390 போன்றே காட்சியளிக்கிறது. இதில் உள்ள ஹெட்லேம்ப் சற்று பிரமான்டமாக காட்சியளிக்கிறது. இதன் ஃபியூவல் டேன்க் எக்ஸ்டென்சன்கள் கூர்மையாகவும், அதிக மஸ்குலர் தோற்றமும் கொண்டிருக்கின்றன. இதன் பின்புறம் பாடி பேனல்கள் எதுவும் இல்லாமல், ரிவைஸ்டு ஃபிரேம் முழுக்க தெரிகிறது. ஆரஞ்சு மற்றும் பிளாக் பெயின்ட் இந்த பைக் தோற்றத்தை மேலும் மேம்படுத்தி இருக்கிறது. புதிய 2024 கே.டி.எம். 125 டியூக் மாடலிலும் 124.9 சிசி லிக்விட் கூல்டு என்ஜின் தான் வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த என்ஜின் 14.7 ஹெச்.பி. பவர், 11 நியூட்டன் மீட்டர் டார்க் இழுவிசையை வெளிப்படுத்தும் திறன் கொண்டிருக்கிறது. இத்துடன் 6 ஸ்பீடு கியர்பாக்ஸ் வழங்கப்படுகிறது.



# என்எல்சி காற்றாலை மின் திட்டம் செயல்படுத்த ஐபாக்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம்



புது தில்லி, ஆக.23

காற்றாலை மின் திட்டத்தை செயல்படுத்துவதற்கும், பராமரிப்பதற்கும் ஐபாக்ஸ் விண்ட்டெக்னிக் நிறுவனத்துடன், என்எல்சி எனப்படும் நெய்வேலி நிலக்கரி நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

ஐபாக்ஸ் விண்ட்டெக்னிக் நிறுவனம், காற்றாலைகளுக்கான செயல்பாடு மற்றும் பராமரிப்பு சேவையை வழங்கி வரும் முன்னணி நிறுவனமான ஐனாக்ஸ் கிரின் எனர்ஜி சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்தின் துணை நிறுவனமாகும்.

இது, தமிழகத்தில், என்எல்சிக்கு சொந்தமான 51 மெகாவாட் காற்றாலை திட்டத்திற்கான செயல்பாடு மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்க ஒப்பந்தம் செய்துள்ளது. இது குறித்து, ஐனாக்ஸ் கிரின் எனர்ஜி சர்விசஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி மது சூதனா தெரிவித்துள்ளதாவது:

இந்த ஒப்பந்தம், எங்கள் குழுமத்தின் வளர்ச்சிக்கு ஒரு முக்கிய மைல்களாக இருக்கும். ஐந்து ஆண்டு கால ஒப்பந்தத்தில், செயல்பாடு மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்கி, ரூ.40 கோடி வருவாய் ஈட்டப்படும். மேலும், 2025-26 நிதியாண்டிற்குள், 6 ஜிகா வாட் என்ற இலக்கை அடையும் நோக்கில் நாங்கள் முன்னேறி வருகிறோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# வெங்காய ஏற்றுமதி விலையை விட அதிக விலைக்கு மத்திய அரசு கொள்முதல்: பியூஸ் கோயல் தகவல்



புது தில்லி, ஆக.23

வெங்காய ஏற்றுமதியில் கிடைக்கும் விலையை விட அதிகமாக குவிண்டாலுக்கு ரூ.2,410 என மத்திய அரசு கொள்முதல் செய்ய உள்ளதால், அதன் மீதான ஏற்றுமதி வரி விதிப்பு குறித்து விவசாயிகள் கவலைப்பட தேவையில்லை என மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இது குறித்து விரிவான செய்தியாவது: நடப்பு காரீஃப் பருவத்துக்கான வெங்காய விளைச்சலைக் கருத்தில் கொண்டு, உள்நாட்டு சந்தையில் அதன் விநியோகத்தை அதிகரிக்கவும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதைக் கட்டுப்படுத்தவும், வெங்காய ஏற்றுமதி மீது 40 சத வரியை மத்திய அரசு விதித்தது.

நாட்டின் மொத்த வெங்காய இருப்பை நிகழாண்டு இலக்கான 3 லட்சம் டன் என்ற அளவிலிருந்து 5 லட்சம் டன்னாக உயர்த்த, கூடுதலாக 2 லட்சம் டன் வெங்காயம் கொள்முதல் செய்யப்படும் என மத்திய அரசு அறிவித்தது. இந்நிலையில், தில்லியில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளதாவது: நுகர்வோரின் நலனைக் கருத்தில் கொண்டே வெங்காய ஏற்றுமதிக்கு வரி விதிக்கப்பட்டது. அதேவேளையில், விவசாயிகளிடமிருந்து கூடுதலாக 2 லட்சம் டன் வெங்காயம் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. முன்னெப்போதும் இல்லாத வகையில் குவிண்டாலுக்கு ரூ.2,410 என்ற விலையில் வெங்காயம் கொள்முதல் செய்யப்படும். வெளிநாட்டு ஏற்றுமதியிலிருந்து பெறப்படும் சராசரியான விலையான ரூ.1,800-1,900 விட கொள்முதல் விலை அதிகமாக உள்ளது.

மேலும், வெங்காய சாகுபடி நடைபெறும் மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் இது குறித்து கவலைப்படவோ, பதற்றமடையவோ தேவையில்லை. வெங்காய கொள்முதலைத் தொடங்குமாறு இந்திய தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு (என்சிசிஎஃப்), இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பு (என்ஏஎஃப்இடி) ஆகியவற்றுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது, காரீஃப் பருவத்துக்கான வெங்காய சாகுபடி நடைபெற்று வருகிறது. சாகுபடி பரப்பு கடந்த ஆண்டைப் போன்று இருக்கும்பட்சத்தில், விளைச்சல் நன்றாக இருக்கும் என்றார் அவர்.

# உரங்களின் கையிருப்புக் குறித்து அமைச்சர் ஆய்வு



புது தில்லி, ஆக.23

நாட்டில் உரங்களின் இருப்பு மற்றும் பயன்பாடு குறித்து மாநில வேளாண் அமைச்சர்களுடன் மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா கலந்துரையாடினார். கூட்டத்தில், நானோ யூரியா, நானோ டிஏபி போன்ற உரங்கள் பயன்பாட்டின் முன்னேற்றம் மற்றும் மாற்று உரங்களை ஊக்குவித்தல் போன்றவை குறித்தும் அவர் ஆய்வு செய்தார். கூட்டத்தில் பேசிய டாக்டர் மாண்டவியா, நாட்டில் போதுமான அளவு உரங்கள் கையிருப்பில் இருப்பதாகவும், தற்போது 150 லட்சம் மெட்ரிக் டன் உரங்கள் கையிருப்பில் உள்ளதாகவும் தெரிவித்தார். இது நடப்பு காரீஃப் பருவத்துக்கு போதுமானதாக இருக்கும் என்பதுடன், வரவிருக்கும் ராபி பருவத்திற்கும் பயன்படும் என்று கூறினார்.

மண்ணைப் பாதுகாக்க ரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைக்க வேண்டியதன் அவசியத்தை டாக்டர் மாண்டவியா எடுத்துரைத்தார். 'பிரதமர்-பிரணாம்' திட்டத்தின் கீழ், மத்திய அரசு ஏற்கனவே இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது என்று அவர் கூறினார். பூமித் தாயைக் காப்பாற்ற மாற்று உரங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக யூரியா கோல்ட், நானோ யூரியா, நானோ டிஏபி போன்றவற்றை அறிமுகப்படுத்துவதும் இந்த முயற்சிகளின் ஒரு பகுதியாகும் என அவர் தெரிவித்தார்.

விவசாயிகளின் அனைத்து தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்யும் வகையில் நாடு முழுவதும் பிரதமரின் வேளாண் வள மைங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பது குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அனைத்து மாநில வேளாண் அமைச்சர்களும், மாநில அரசு அதிகாரிகளும் இந்த இந்த வேளாண் வள மையங்கள் தொடர்பாக விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார். பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த வேளாண் அமைச்சர்கள், உரத் துறை மற்றும் வேளாண்மைத்துறையின் மூத்த அதிகாரிகள், மாநில அரசுகளின் மூத்த அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# நெகிழி ஒழிப்பு, மீண்டும் மஞ்சப்பை விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் துவக்கி வைத்தார்



விருதுநகர், ஆக.23

விருதுநகர் தேசபந்து மைதானத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளிக்கல்வித்துறை சார்பில் நெகிழி ஒழிப்பு மற்றும் மீண்டும் மஞ்சப்பை பயன்படுத்துவதை ஊக்கப்படுத்தும் விதமாக மாணவர்கள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் வீ.ப.ஜெயசீலன் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் மீண்டும் மஞ்சப்பை இயக்கம் மூலம் பள்ளி மாணவ மாணவிகளுக்கு நெகிழி ஒழித்து துணிப்பைகள் பயன்பாட்டை ஊக்கு விக்கும் விதமாக மஞ்சப்பைகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். மேலும் பொதுமக்களுக்கும் மஞ்சப்பைகளை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மூலம் ஒரு முறை பயன்படுத்தும் நெகிழி ஒழிப்பு மற்றும் மீண்டும் மஞ்சப்பை விழிப்புணர்வு குறித்து பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் பள்ளி மாண வர்களுக்கும் பொதுமக்களுக்கும் நெகிழி ஒழிப்பு மற்றும் மீண்டும் மஞ்சப்பை பயன்படுத்துவதை ஊக்கப்படுத்தவும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இன்று பேரணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி விருதுநகர் மாவட்டத்தில் ஒருமுறை பயன்படுத்த பயன்படுத்தும் நெகிழி ஒழிப்பு மற்றும் மீண்டும் மஞ்சப்பை பிரச் சாரம் குறித்து பேரணிகள் பள்ளி மற்றும் கல்லூரி மாண வர்களிடையே விழிப்புணர்வு போட்டிகள் தெருவோர வியாபாரிகள் சாலையோர உணவகங்கள் விற்பனையாளர்கள் வணிக நிறுவ னங்கள் தொழிற்சாலைகள் உள்ளிட்ட இடங்களில் விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பேரணியில் கே.வி.எஸ் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஹா.ஜி.பி மேல்நிலைப்பள்ளி அ.ச.ப.ச. நகராட்சி உயர்நிலைப்பள்ளி ராவ் பகதூர் நகராட்சி உயர்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 500க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு நெகிழி ஒழிப்போம் மீண்டும் மஞ்சப்பை பயன்படுத்துவோம் உள்ளிட்ட விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தி பேரணியாக சென்றனர். இப்பேரணியானது விருதுநகர் தேசபந்து மைதானத்தில் இருந்து கே.வி.எஸ் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வரை சென்று நிறைவடைந்தது.

# கடந்த ஜூன் மாதத்தில் பிஎப் நிறுவனத்தில் 18 லட்சம் உறுப்பினர்கள் இணைப்பு

புது தில்லி, ஆக.23

கடந்த ஜூன் மாதத்தில், தொழிலாளர் வைப்பு நிதி நிறுவனமான இ.பி.எப்.ஓ.,வில், 17.89 லட்சம் உறுப்பினர்கள் சேர்ந்துள்ளதாக தொழிலாளர்நல அமைச்சகம் தன் அறிக்கையில் தெரிவித்துள் ளது. இதுகுறித்து, தொழிலாளர் நல அமைச்சகம் மேலும் தெரிவித்திருப்பதாவது: கடந்த ஜூனில் பிஎப் அலுவலகம், 17.89 லட்சம் உறுப்பினர்களை சேர்த்துள்ளது. இது முந்தையமே மாதத்துடன் ஒப்பிடுகையில், 9.71 சத கூடுதலாகும்.இந்த மாதத்தில் இபிஎப்பில் இணைந்தவர்களில், 18 முதல் 25 வயதுக்குட்பட்ட வர்களின் எண்ணிக்கை, அதாவது புதிய உறுப்பினர்களின் எண் ணிக்கை, 10.14 லட்சம் பேர் ஆகும். இது, கடந்த 2022 ஆகஸ்ட் மாதத்திற்கு பின் சேர்ந்த அதிக பட்ச உறுப்பினர்கள் எண்ணிக்கை ஆகும். மேலும், முதல் முறையாக 2.81 லட்சம் புதிய பெண் உறுப்பினர்கள் இதில் இணைந்துள்ளனர். நிகர அடிப்படையில், ஜூன் மாதம் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 3.93 லட்சமாகும். கடந்த 11 மாதங்களில் இல்லாத அதிகபட்சஅளவாகும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இந்திய வாகன துறை வளர்ச்சியடையும் மத்திய அமைச்சர் நிதின் கட்கரி தகவல்



புது தில்லி, ஆக.23

சுயசார்பு இந்தியா’ திட்டத்தின் கீழ், ரூ.415 லட்சம் கோடி பொருளாதார நாடாக இந்தியாவை உருவாக்கும் அரசின் கனவுக்கு, இந்திய ஆட்டோ மொபைல் துறை முதுகெலும்பாக இருக்கும் என மத்திய அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது: தற்போது, உலகளவில் அமெரிக்கா, சீனாவிற்கு அடுத்து மூன்றாவது பெரிய கார் உற்பத்தியாளராக இந்தியா மாறியுள்ளது. மேலும், வரும் காலத்தில், இந்திய ஆட்டோமொபைல் துறை அமெரிக்கா, சீனாவைவிட 15 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான தொழில்துறையாக வளர்ச்சி அடையும் என்றார்.

இந்தியா, உலகளவில் வாகன தொழில்துறையில் முன்னணி வகிக்கும். விலை மற்றும் தரத்தின் அடிப்படையில் இந்திய தயாரிப்புகளை மக்கள் விரும்புவர். இந்திய கார்களை உலக தரத்துடன், உயர் பாதுகாப்பு தரங்களுடன் உலக சந்தையில் போட்டியிட வைக்கவும், இந்தியாவில் உள்ள கார் உற்பத்தியாளர்களின் ஏற்றுமதித் திறனை அதிகரிக்கவும் பாரத் என்.சி.ஏ.பி., எனப்படும் புதிய கார் மதிப்பீடு திட்டத்தின் கீழ் விபத்து சோதனைத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.இத்திட்டம், இந்தியாவில் பாதுகாப்பு - உணர்திறன் கொண்ட கார் சந்தையை உருவாக்கும் என நம்புகிறோம் என்றார்.



# நடப்பு 2023-24ம் நிதியாண்டில் ரூ.14,560 கோடிக்கு ஜவுளிகள் ஏற்றுமதி



சென்னை, ஆக.23

நடப்பு 2023 - 24ம் நிதியாண்டின் முதல் காலாண்டில், தமிழகத்தில் இருந்து ரூ.14,560 கோடி மதிப்பிலான, ஜவுளி மற்றும் அதை சார்ந்த பொருட்கள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து, ஜவுளி துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளதாவது: வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்கள் பட்டியலில், ஜவுளி மற்றும் ஜவுளி சார்ந்த பொருட்கள் ஏற்றுமதியில், தமிழகம் முதல் இடத்தில் உள்ளது. கடந்த, 2022 - 23ம் நிதியாண்டில், ரூ. 65,513 கோடி மதிப்பிலான ஜவுளிகள் தமிழகத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில், தமிழகத்தில் இருந்து ரூ.14, 560 கோடி மதிப்பிலான, ஜவுளி மற்றும் அதை சார்ந்த பொருட்கள்ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இது, 2022 - 23ம் நிதியாண்டின் முதல் காலாண்டில், ரூ.19,128 கோடியாக இருந்தது. நடப்பு நிதியாண்டில், குஜராத் மாநிலம் ரூ.10,084 கோடி ஏற்றுமதியுடன் இரண்டாவது இடத்திலும், மஹாராஷ்டிரா மாநிலம் ரூ.7,594 கோடி ஏற்றுமதியுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

முதல் காலாண்டில், நாடு முழுதும் ரூ.69,208 கோடி ஜவுளி மற்றும் அதை சார்ந்த பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.